IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.160/2022

Deposition of Witness for P.W.16

| | | |
|---|---|---|
| NAME | - | திரு. ஜெயசங்கர் |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.11.2025.

2, 4, 7 எதிரிகள் ஆஜர். 1, 3, 5, 6 ஆஜர் இல்லை மனு ஏற்பு. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது காட்பாடி போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். 10.06.2020 இல் நான் பணமடங்கி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனியலிருந்து கிடைக்கப் பெற்ற தகவலைப் பெற்று 10.06.2020 மாலை சுமார் 6.25 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று உள் நோயாளியாக இருந்த சின்னம்மாள் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்றேன். பின்னர் நிலையம் வந்து அன்று மாலை 7.00 மணிக்கு நிலையக் குற்ற எண்.252/2020 பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 307, 302, இ.த.ச. படி வழக்கு பதிவு செய்தேன். அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.25 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை-</u>

மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட தகவலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. புகார் வாக்குமூலத்தில் வாகனத்தின் பதிவு எண்கள்

வாகனத்தின் விவரங்கள் ஆகியவை எவையும் புகார் வாக்குமூலம் அளித்த சின்னம்மாளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் புலன் விசாரணையின் அடிப்படையில் பெற்ற தகவலை புகார் வாக்குமூலத்தில் நாங்களாகவே சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. சின்னம்மாளிடம் வெற்று தாளில் கை ரேகை பெற்று பின்னர் ஆய்வாளரின் அறிவுருத்தல் மற்றும் ஆலோசனையின் பேரில் நானாகவே புகார் வாக்குமூலம் எதிரிகளின் மீது தயார் செய்தேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள வாசகங்கள் எழுதப்பட்ட கையெழுத்து என்னுடையது இல்லை. மருத்துவமனையில் மாதிரி புகார் வாக்குமூலதாரிடம் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து வேறோரு வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் வாக்குமூலதாரர் சொன்னதை மருத்துவமனையில் எழுதி காவல் நிலையம் வந்து அ.த.சா.ஆ.1 எழுதப்பட்டது. புகார் வாக்குமூலம் வாங்குவதற்கு முன்பாகவே காவல் ஆய்வாளர் சம்பவயிடம் சென்று விசாரித்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் மருத்துவமனைக்கு புகார் வாக்குமூலம் வாங்க சென்றுவிட்டேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 25.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.25 19:40:30 +0530

Additional District Judge(FTC),
Vellore